
MINISTRY OF HEALTH
SINGAPORE

**திருவாட்டி சண்முகாவின் மருத்துவமனைக் கட்டணம்**

| | |
|---|---|
| மொத்த கட்டணம் | $41,868.20 |
| மருத்துவமனையில் தங்கிய நாட்கள் | 28 days (ICU-ல் தங்கிய 6 நாட்கள் உட்பட) |
| அரசாங்கத் தள்ளுபடி | $35,081.31 |
| தள்ளுபடிக்குப் பிறகு மொத்த கட்டணம் | $6,786.89 |
| மெடிஷீல்டு கட்டிய தொகை | $6,024.78 |
| மெடிசேவில் கோரிய தொகை | $748.81 |
| ரொக்கமாகக் கட்டிய தொகை | $ 13.30 |

நோயாளி ரொக்கமாகக் கட்டிய தொகையின் விகிதம்: 0.2%




# பெருமளவு உதவும் கரம்

**அரசாங்கத் தள்ளுபடிகள், மெடிசேவ், மெடிஷீல்டு ஆகியவை இருப்பதால், சுகாதாரப் பணியாளர் தமிழ் மணி தனது மாமியாரின் $42,000 மருத்துவமனை கட்டணத்தில் வெறும் $13.30 மட்டுமே ரொக்கமாகக் கட்டினார்.**

திருவாட்டி சண்முகா தாயிக்கு (கீழே, இடது) இதய அறுவை சிகிச்சை தேவைப்பட்டபோது அவர் கண்ணீர் வடித்தார். அவரது கண்ணீருக்குக் காரணம் மரண பயமல்ல, மருத்துவமனை கட்டணம் நிறைய வருமே என்ற அச்சம்தான்.

நீரிழிவு நோயாளியான திருவாட்டி சண்முகாவுக்கு உயர் இரத்த அழுத்தம், சிறுநீரகக் கோளாறு, சுவாசப் பிரச்னைகள் இருந்தன. அவரது இரத்தக்குழாயில் 75 விழுக்காடு அடைப்பு ஏற்பட்டிருந்தது.

உயிர் பிழைக்கும் வாய்ப்பு 50-50 விகிதம் என மருத்துவர் அவரிடம் கூறியிருந்தார்.

மருத்துவமனை கட்டணத்தைப் பற்றி கவலைப்பட்ட அவர், தனது உடல்நிலையில் அறுவை சிகிச்சைக்குச் செல்லத் தயங்கினார்.

இவரது மகனுக்குப் புற்றுநோய். மருமகள் மட்டுமே அப்போது குடும்பத்திற்காகச் சம்பாதித்தார். எக்கச்சக்கமான மருத்துவமனை கட்டணச் சுமையை அவர்கள்மீது சுமத்துவதற்குப் பதிலாகத் தான் இறந்துவிட விரும்புவதாக இந்த 61 வயது இல்லத்தரசி அவர்களிடம் சொன்னார்.

ஆனால், மருத்துவமனையில் சுகாதாரப் பணியாளராக வேலை செய்து மாதத்திற்கு $600 சம்பாதிக்கும் அவரது மருமகள் தமிழ் மணி, வயது 42, அறுவை சிகிச்சைக்குச் செல்லுமாறு திருவாட்டி சண்முகாவின் மனதை மாற்றினார்.

"உங்கள் உயிர்தான் முக்கியம் என்று அவரிடம் சொன்னேன். எங்களிடம் பணமில்லாவிட்டாலும், வேறு தீர்வைகள் உண்டு," என்றார் திருவாட்டி மணி. உதவி வழங்கப்படும் என்று மருத்துவச் சமூக சேவையாளர்களும் இவரது குடும்பத்தாரிடம் உறுதி அளித்தனர்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு, சென்ற ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில், வகுப்பு C படுக்கைப்பிரிவில் திருவாட்டி சண்முகா மொத்தம் 28 நாட்கள் தங்கியிருந்தார். அதில் ஆறு நாட்களைத் தீவிர சிகிச்சைப் பிரிவில் கழித்தார்.

இவரது மொத்த கட்டணம் $41,868.

ஆனால், வகுப்பு C படுக்கைப்பிரிவின் தாராளமான தள்ளுபடியுடன் இவரது கட்டணம் சுமார் $6,786 ஆகக் குறைந்தது. மெடிசேவ் சேமிப்பில் கழித்து, மெடிஷீல்டு உதவித் தொகை பெற்ற பிறகு, திருவாட்டி மணி தனது மாமியாரின் மருத்துவமனை கட்டணத்தில் வெறும் $13.30 மட்டுமே கட்டினார்.

அதே ஆண்டில் திருவாட்டி சண்முகா அதற்குமுன் மருத்துவமனையில் தங்கியபோது மெடிஷீல்டு கழிப்புத்தொகை கட்டப்பட்டுவிட்டதால், இம்முறை கழிப்புத்தொகையும் கிடையாது. "C" வகுப்புக்கான $1000 மெடிஷீல்டு கழிப்புத்தொகை ஒவ்வொரு காப்புறுதி ஆண்டும் ஒருமுறை மட்டுமே கட்டப்படுகிறது.

"ஏழு ஆண்டுகளுக்கு முன் எனது மாமியாருக்கு மெடிஷீல்டு வாங்கினேன். அது சரியான முடிவு. மெடிசேவுக்கும் மெடிஷீல்டுக்கும் எனது நன்றி. அவை இரண்டும் இல்லாவிட்டால், எங்களால் மருத்துவமனை கட்டணத்தைக் கட்டியிருக்க முடியாது," என்றார் திருவாட்டி மணி.

"எங்களுக்கு உதவியாக இத்திட்டங்கள் இருப்பது மகிழ்ச்சி தருகிறது. இள வயதில் சளிக்காய்ச்சல் போன்ற சாதாரண நோய்கள் பாதிக்கும்போது, இதுபோன்ற திட்டங்கள் தேவையில்லை என்று நினைக்கிறோம். ஆனால் புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு, நீண்டகால நோய்கள் போன்றவை எப்போது வேண்டுமானாலும் பாதிக்கக்கூடும். இத்திட்டங்கள் எவ்வளவு பயனுள்ளவை என்பது இப்போது எனக்குத் தெரிகிறது.

"நான் புண்ணியம் அடைந்ததாக நினைக்கிறேன். அறுவை சிகிச்சைக்குப் பிறகு என் மாமியாரின் உடல்நலம் தேறியுள்ளது. இப்போது அவர் ஓரளவு சுதந்திரமாக இருக்கிறார்."

திருவாட்டி மணியின் கணவரைப் பாதித்திருக்கும் புற்றுநோய்க்கு கீமோதெரபி சிகிச்சை செய்வதற்கான சுமையைக் குறைக்க தள்ளுபடிகளும் மெடிசேவும் உதவின.

தனது மாமியார் வகுப்பு C படுக்கைப்பிரிவில் தங்கியதால் அவர் 80 விழுக்காடு தள்ளுபடியை அனுபவித்தார் என்றும், அதனால் அவரது மருத்துவமனை கட்டணம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்தது என்றும் திருவாட்டி மணி சொன்னார்.

"என் மாமியார் வகுப்பு C படுக்கைப்பிரிவையே உண்மையில் விரும்பினார். ஏனெனில், அங்கு அவருக்குத் துணையாக மற்ற நோயாளிகள் இருந்தனர்!" என்றார் திருவாட்டி மணி.

மருத்துவர்களும் தாதிகளும் நிபுணத்துவத் திறன் பெற்றவர்கள் என்பதையும் குடும்பத்தினர் அறிந்தனர்.

"எங்கள் கேள்விகள் அனைத்திற்கும் பொறுமையாகப் பதில் சொன்னார்கள் என்றார் திருவாட்டி மணி.



> மெடிசேவுக்கும் மெடிஷீல்டுக்கும் எனது நன்றி. அவை இரண்டும் இல்லாவிட்டால், எங்களால் மருத்துவமனை கட்டணத்தைக் கட்டியிருக்க முடியாது.
>
> - திருவாட்டி மணி.

சில விஷயங்களை விளக்கிச் சொல்ல மருத்துவரே எங்களை அழைத்துப் பேசுவார். என் மாமியார் வகுப்பு C படுக்கைப்பிரிவில் தங்கியிருந்தாலும், அனைத்து நோயாளிகளையும் அவர்கள் சமமாக நடத்தினார்கள்."

பெருமளவு தள்ளுபடிகளின் துணையுடன், வகுப்பு C கட்டணங்களில் பெரும்பாலானவை கட்டுப்படியாகும் அளவில் இருக்கும். வகுப்பு C படுக்கைப்பிரிவின் நடுத்தர அளவு கட்டணம் $580. சிறுபான்மை கட்டணங்கள் மட்டுமே திருவாட்டி சண்முகாவின் கட்டணம் போல பெரிய தொகையாக இருக்கும். அப்போதுகூட, மெடிஷீல்டும் மெடிசேவும் இருப்பதால், பெரும்பாலான நோயாளிகள் குறைந்தபட்சத் தொகையை மட்டுமே சொந்தமாகக் கட்ட நேரிடும்.

கட்டணங்கள் கட்டுப்படியாகும் அளவில் இருப்பதை உறுதிப்படுத்திட, 2006ம் ஆண்டு நோயாளிகளுக்கு நேரடித் தள்ளுபடியாக $1.5 பில்லியன் வழங்கப்பட்டது. இந்தத் தொகை 2012க்குள் ஆண்டுக்கு $2 பில்லியனுக்கு மேல் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், திருவாட்டி சண்முகா போன்ற நோயாளிகளுக்கு உதவிட, குறைந்த வருவாய் பிரிவினரைத் தள்ளுபடிகளின் இலக்காக்கும் பண வசதிச் சோதனையை சுகாதார அமைச்சு பரிந்துரைக்கிறது. தள்ளுபடி பெறும் படுக்கைப்பிரிவுகளை அரசாங்கம் தொடர்ந்து மேம்படுத்தும்.

வகுப்பு B2, C ஆகியவற்றில் தங்கும் நோயாளிகளில் பெரும்பாலோர் தற்போதைய தள்ளுபடி விகிதங்களைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள். உயர்தர படுக்கைப்பிரிவுகளில் தங்கக்கூடிய வசதியிருந்தும், வகுப்பு B2 அல்லது C தேர்ந்தெடுக்கும் நடுத்தர வருமான மேற்பிரிவையும் உயர் வருமானப் பிரிவையும் சேர்ந்த சிறுபான்மையினரை மட்டுமே பண வசதிச் சோதனை பாதிக்கும்.

சுகாதாரப் பராமரிப்புச் செலவுகளைக் கட்டுப்படியாகும் அளவில் வைத்திருப்பதில் நம் அனைவருக்கும் பங்கிருப்பதால், மெடிசேவ் மற்றும் மெடிஷீல்டு திட்டங்களுக்கு நாம் சந்தா செலுத்துவது முக்கியம்.

"நோய் எந்த நேரத்திலும், இள வயதினரையும் பாதிக்கக்கூடும். எனவே, மெடிசேவும் மெடிஷீல்டும் பெற்றிருப்பது முக்கியம்," என்றார் திருவாட்டி மணி. "என் மாமியாருக்கு நான் மெடிஷீல்டு வாங்கியதில் எனக்கு மகிழ்ச்சி".

மேல் விவரங்கள் அறிய, அன்புகூர்ந்து www.moh.gov.sg பார்க்கவும்